வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, மூன்றாம் தவணை- 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education Northern Province
3rd Term Examination - 2020

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| **வணிகக்கல்வி - I**<br>**Business Studies - I** | **Three Hours**<br>**Gr. 12 (2021)** | **32** | **T** | **I** |

(மேலதிக வாசிப்பு 10 நிமிடம்)

**அறிவுறுத்தல்கள்:-**

- எல்லா வினாக்களுக்கும் இத்தாலிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

## பகுதி – I

01. வணிகத்தின் பரிநாம வழர்ச்சிக் கட்டங்கள் தொடர்பில் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
   1. நேரில் உற்பத்தியில் ஈடுபடுவதன் மூலம் சிறப்புத் தேர்ச்சி ஏற்படும்.
   2. மிகை உற்பத்தியால் நேர் உற்பத்தி தோற்றம் பெறும்
   3. பண்டமாற்றுடன் பணம் தோற்றம் பெற்றது
   4. நேர்உற்பத்தி மூலம் தனிநபர் சிறப்புத் தேர்ச்சி ஏற்பட்டது.
   5. மிக உற்பததியால் கைத்தொழிற்புரட்சி ஏற்பட்டது (…….)

02. பின்வருவனவற்றுள் பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகம் பங்களிப்புச் செய்யும் முறையொன்றாக கருதமுடியாதது எது?
   1. அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு பங்களிப்புச் செய்தல்
   2. மாற்றமடையும் சிக்கலான விருப்பங்களை நிறைவு செய்தல்
   3. புத்துருவாக்கத்தில் ஈடுபடுத்தல்
   4. வேலைவாய்ப்புகளை வழங்குதல்
   5. தேசிய பொருளாதார விருத்தியை ஏற்படுத்தல் (…….)

03. வணிகத்தில் செல்வாக்குச் செலுத்தக்கூடியதும் வணிகத்தால் கட்டுப்படுத்த முடியாததும் ஆனால் நிதிமுறை நெறிப்படுத்துணரின் தலையீட்டால் கட்டிப்படுத்தக் கூடியதுமான சூழல் பின்வருவனவற்றுள் எது?

   1. அரசியல் சூழல் 2. சட்டச்சூழல் 3. பொருளாதாரச்சூழல்
   4. சமூககலாச்சாரச் சூழல் 5. தொழில்நுற்பச்சூழல் (…….)

04. பின்வருவனவற்றுள் சமூக நிலைபேறன அபிவிருத்தியுடன் தொடர்படைய விடயம் எது?

1. மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்துதல்
2. வளங்களை வினைத்திறமையாகப் பயன்படுத்தல்
3. பங்குதாரரின் அனுகூலங்களை விருத்தி செய்தல்
4. புத்தாக்கங்களை அறிமுகப்படுத்தல்
5. தொழில்நுற்பங்களை விருத்தி செய்தல் (…….)

05. பின்வரும் அட்டவணையானது சர்வதேச தரக்குறியீடுகளையும் அவற்றிகான பெயர்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| **சர்வதேச தரக்குறியீடுகள்** | **அவற்றிற்கான பெயர்கள்** |
|---|---|
| A) ISO 50001 : 2018 | 1. சமூகப்பொறுப்புத்தொடர்பானது. |
| B) ISO 45001 : 2018 | 2. சூழல் பாதுகாப்பு தொடர்பானது. |
| C) ISO 26000 : 2010 | 3. சக்தி செயல்திறன் முகாமைத்துவம் |
| D) ISO 14001 : 2015 | 4. உயர் தொழிலும் சௌக்கியமும் |

மேலே கூறப்பட்ட அட்டவணையின்படி சர்வதேசக் குறியீடுகளின் பெயர்களுக்கு ஏற்ப குறியீடுகளைச் சரியான ஒழுங்கில் காட்டும் தொகுதியைத் தெரிவு செய்க.

1. A, C, B, D    2. C, D, B, A    3. C, A, B, D
4. C, D, A, B    5. B, A, D, C    (…….)

06. பின்வருவன நுகர்வோரின் உரிமைகள் ஆகும்.

A – பாதுகாப்பை பெறுவதற்கான உரிமை
B – அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உரிமை
C – தகவல்பெறுவதற்கான உரிமை
D - இழப்பீட்டை பெறுவதற்கான உரிமை
E – நுகர்வோர் கல்விக்கான உரிமை
F – தெரிவு செய்வதற்கான உரிமை
G – தேக அரோக்கியம் கொண்ட சூழலில் வாழ்தற்கான உரிமை
H – செவிமடுப்பதற்கான உரிமை

மேலே கூறப்பட்டவற்றில் சர்வதேச நுகர்வோர் என்ற அமைப்பால் பிரகடணப்படுத்தப்பட்ட உரிமைகளை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்தல்

1. B, D, G, H    2. B, D, E, G    3. B, C, E, G
4. C, D, F, G    5. C, D, G, H    (…….)

07. வரையறுத்த பொதுக்கம்பனி ஒன்றுடன் தொடர்புபடாத விடயம் பின்வருவனவற்றுள் எது?

1. பங்குதாரர் எண்ணிக்கை இழிவளவு ஒருவரும் உச்சஅளவு வரையறுக்கப்படவில்லை
2. பங்குதாரர்கள் பங்குகளை கைமாற்றம் செய்வதால் தடைகள் இல்லை
3. பங்குதாரர்களுக்கு பங்கு இலாபம் வழங்கும்போது கடன் தீர்க்கும் நிலை பற்றிய சோதனை அவசியமில்லை
4. இத்தகைய கம்பனிகளை பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளாகவும் பதிவு செய்யலாம்.
5. இழிவளவு இயக்குணர் எண்ணிக்கை இரண்டுபேர் (…….)

08. தளபாட உற்பத்தி நிறுவனம் ஒன்று பாதணி உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றுடன் இணைவதன் மூலம் உருவாகும் வணிக இணைவு பின்வருவனவற்றுள் எது

1. வணிக இணைவு	2. கையகப்படுத்தல்	3. முரண்பாடான இணைவு
4. நிலைக்குத்து இணைவு	5. கிடை இணைவு	(…….)

09. கண்ணன் என்பர் ஓர் தொழில்நுட்பத்துறைப் பட்டதாரி ஆவார். இவர் ஆக்கத்திறன் மிக்க முறையில் சிந்திக்கக் கூடியவர் இவர் மாற்றத்திறனாளிகள் பயன்படுத்துவதற்கு இலகுவான சூரிய சக்தியால் இயங்கககக் கூடிய மோட்டார் சைக்கிளை உருவாக்கினார். இவர் தனது அர்பணிப்பினாலும் தன்னம்பிக்கையினாலும் குறித்த முயற்சியை இலங்கைக்குள் வழங்குவதற்கு திட்டமிட்டபடி இடர்ரைத் தாங்குவதற்கும் தயாராகி குறித்த வணிகத்தை ஆரம்பித்தார்.
மேற்குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய முயற்சியாண்மையின் பொதுவான பண்புகள் எத்தனை

1. 3	2. 4	3. 5
4. 6	5. 7	(…….)

10. பின்வரும் அட்டவணையானது பண்டமாற்றுமுறையின் குறைபாடுகளையும் பணத்தின் தொழிற்பாடுகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

| பண்டமாற்றின் குறைபாடுகள் | பணத்தின் தொழிற்பாடுகள் |
|---|---|
| 1. இரட்டைத் தேவைப் பூர்தியின்மை | A – செல்வத்திரட்டுத் தொழிற்பாடு |
| 2. பொருட்களின் பெறுமதியை மதிப்பிட முடியாமை | B – பெறுமான அளவைத் தொழிற்பாடு |
| 3. பொருட்களை எதிர்காலத்தேவைக்காக சேமிக்க முடியாமை | C – பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியமம் |
| 4. எதிர்காலக் கொடுப்பனவை மேற்கொள்ளமுடியாமை | D – பரிமாற்று ஊடகத் தொழிற்பாடு |

மேற்கூறப்பட்ட அட்டவணையின்படி பண்டமாற்று முறையின் குறைபாடுகளை தீர்கக்கூடிய பணத்தின் தொழிற்பாடுகளைக் சரியாகக் காட்டும் கூற்று எது

1. D,A,C,B	2. D, B, A, C	3. D, B, C, A
4. B, D, A, C	5. B, A, C, D	(…….)

11. பின்வருவனவற்றில் காசோலைப் பயன்பாடு தொடர்பாகத் தவறான கூற்று எது?

1. காவியின் காசோலை ஒன்றினை புறக்குறிபபிடல் இன்றி கைமாற்றம் செய்யமுடியும்
2. காசோலை ஒன்றில் இருந்து குறுக்குக் கோட்டினை நீக்கும் அதிகாரம் வரையுணருக்கு மட்டுமே உண்டு
3. கட்டளைக் காசோலை, பெறுவோன் கணக்கு மட்டும் எனக் குறுக்குக்கோடிட்ட காசோலைகள் ஒரு நபரின் பெயரிலேயே அமைதல் வேண்டும்
4. காசோலை வங்கித் தொழில் சட்டத்திற்கு அமைய பயன்படுத்தப்படுகின்றது.
5. காசோலை ஒன்றின் ஆயுள்காலம் ஆறு ஆண்டுகள் ஆகும்.	(…….)

12. வணிகர் ஒருவரால் மேற்கொள்ளக்கூடிய சில காப்புறுதி ஒப்பந்தங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

A – மோட்டார் வாகனக்காப்புறுதி

B – ஊழியர் நட்டஈட்டு காப்புறுதி

C – தீ ஆபாயக் காப்புறுதி

D – கடலபாயக் காப்புறுதி

E – உற்பத்திப் பொருள் பொறுப்புக்காப்புறுதி

மேலே கூறப்பட்டவற்றில் பொறுப்புக்காப்புறுதி வகைகளை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

1. A,B,D　　2. A,B,C　　3. A, D, E

4. B,C,D　　5. A, B, E　　(…….)

13. நிலைபேறுடைய அபிவிருத்தியில் போக்குவரத்துத் துறையின் அபிவிருத்தியின் பங்களிப்பாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

1. பாதை, சாதனம், சக்தி, தரிப்பிடம் என்பவற்றில் ஏற்பட்ட விருத்தி.
2. விமான ஓடுபாதைகள் புணரமைக்கப்பட்டமையில் சர்வதேச வர்த்தகத்தில் ஏற்பட்ட வளர்ச்சி
3. துறைமுகங்கள் புணரமைக்கப்பட்டவையால் வர்த்தகத் தொடர்புகள் அதிகரிக்கப்பட்டமை
4. தரைப்போக்குவரத்து, புகையிரதப் போக்குவரத்தில் ஏற்பட்ட விருத்தி.
5. நகரங்களிடையே ஏற்பட்ட வர்த்தக மேம்பாடு　　(…….)

14. இணையத்தைப் பயன்படுத்தி உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதனால் கிடைக்கும் நன்மைகள் என்ற வகையில் 6C என்பதனுள் உள்ளடங்காத விடயம் பின்வருவனவற்றுள் எது?

1. கிரயம் குறைவானதாக இருத்தல் (Cost effective)
2. தெரிவுக்கு சந்தர்ப்பம் காணப்படல் (Choice)
3. வசதியானதாகக் காணப்படல் (Convence)
4. உறுதி செய்யக் கூடியதாக இருத்தல் (Conformation)
5. தகவல்களை இலகுவாகப் பரிமாற்றக் கூடியதாக இருத்தல் (Communication)　　(…….)

15. குற்றமுடைய சுமைச்சீட்டு ஒன்றினை தூய சுமைச்சீட்டாக மாற்றுவதற்கு சர்வதேச வியாபாரத்தில் பயன்படுத்தும் ஆவணம்

1. நாணயக்கடிதம்　　2. நட்டஈட்டுக்கடிதம்

3. கட்டளை அட்டவணை　　4. காப்புறுதிப்பத்திரம்

5. உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்　　(…….)

16. (அ) குறித்த ஓர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ……………………………….……………. உடன் ஏற்படுகின்ற விருப்பம் …………………………..…………………… ஆகும்.

(ஆ) ஓர் நாட்டு அரசியல் எல்லைக்குற்பட்ட பிரதேசத்தில் குறிப்பிட்ட காலப்பகுதியில் உற்பத்தியாக்கப்பட்ட அனைத்து உற்பத்திகளினதும் மொத்தப் பெறுமதி …………………… …………..……..….. என அழைக்கப்படுவதுடன், இலங்கை மத்திய வங்கி ஆனது இதனை தற்போது ………………………………… அடிப்படையில் கணிப்பிடுகின்றது.

17. (அ) வணிகச் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் நல்லவை, கெட்டவை தொடர்பில் வணிகம் பின்பற்ற வேண்டியது ……………………………………….. எனவும் அவை பிரசுரகிக்கப்படும் போது அவை ………………………………. எனவும் அழைக்கப்படுகின்றது.

(ஆ) நாணயக் கொள்கையானது ………………………………………………… ஆல் வகுத்து நடைமுறைப் படுத்தப்படுவதுடன் இறைக் கொள்கையானது ………………….…………… …………..…………….. ஆல் வகுத்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

18. (அ) தனிஉரிமை வணிகம், பங்குடமை வணிகம் என்பன 1918 ஆண்டின் 6ம் இலக்க வியாபாரப் பெயர்கள் சட்டத்தின் கிழ் ……………………………….………….. இல் பதிவு செய்யப்பட வேண்டியவையாக இருப்பதுடன் அவை நடைமுறையில் ……………..………………….. இல் பதிவு செய்யப்படுகின்றது.

(ஆ) அங்கீகார வணிகம் தொடர்பில் ………………..…………… இற்கும் ……….……………. இடையில் ஏற்படுத்தப்படும் ……..………………………….………………. அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றது.

19. (அ) சூழல், சமூக ரீதியான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக உருவக்கப்படுகின்ற புத்தாக்கம் ……………………………….…….. என அழைக்கப்படுவதுடன், தொழில் முயற்சிகளில் பெண் உரிமையாளர்களால் செயல்படுத்தப்படும் முயற்சியாண்மை …………………………………….. எனவும் அழைக்கப்படும்.

(ஆ) சிறு வணிகங்களுக்கு உதவும் நிறுவனங்கள் என்ற வகையில் SLIC என்பது …………………………………… எனவும் NDC என்பது ………………………………….. எனவும் அழைக்கப்படும்.

20. (அ) விமான உற்பத்தி நிறுவனங்கள் பயன்படுத்தும் அமையவியல் முறை ………..………………. எனவும் இரசாயன உற்பத்திக் கம்பனிகள் பயன்படுத்தும் அமையவியல் முறை ………………………………… எனவும் அழைக்கப்படும்.

(ஆ) முதல்வருக்கு அனுகூலம் ஏற்படக்கூடிய வகையில் தனது விருப்பப்படி முதல்வர் சர்பாக பொருட்களைக் கொள்வனவு செய்பவர் அல்லது விற்பனை செய்பவர் …………………… ……………………………….. எனவும், முதல்வர் சார்பாக பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது அல்லது விற்பனை செய்யும் போதும் அக்கொடுக்கல் வாங்கலை தனது பெயரில் மேற்கொள்வதற்கு அதிகாரம் உடையவர் ……………………………………. எனவும் அழைக்கப்படுவார்.

21. வணிகத்தின் நவீன போக்குகள் எவை?

i. ..........................................................................................................

ii. ..........................................................................................................

iii. ..........................................................................................................

iv. ..........................................................................................................

22. ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் நான்கு தருக.

i. ..........................................................................................................

ii. ..........................................................................................................

iii. ..........................................................................................................

iv. ..........................................................................................................

23. கொள்கை வட்டி வீதத்தினுள் உள்ளடக்கப்படும் கூறுகள் எவை?

i. ..........................................................................................................

ii. ..........................................................................................................

iii. ..........................................................................................................

iv. ..........................................................................................................

24. கப்பல் தண்டக் காப்புறுதியில் உள்ளடக்கப்படும் காப்புறுதி ஒப்பந்தத்தின் வகைகள் எவை?

i. ..........................................................................................................

ii. ..........................................................................................................

iii. ..........................................................................................................

iv. ..........................................................................................................

25. வெளிநாட்டு வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைந்த நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

i. ..........................................................................................................

ii. ..........................................................................................................

iii. ..........................................................................................................

iv. ..........................................................................................................

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education Northern Province
3rd Term Examination - 2020

FWC

வணிகக்கல்வி - II
**Business Studies - II**

Gr. 12 (2021) | 32 | T | II

❖ அறிவுறுத்தல்கள்
ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

பகுதி - I

01) I) ராஜா என்பவர் நகர்பகுதியிலுள்ள தனியார் பாடசாலை ஒன்றில் உயர்தர வணிகத்துறையில் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அ) தனியார் பாடசாலையில் இருந்து ராஜாவால் பூர்த்தி செய்யப்பட்ட தேவை ஒன்றையும் விருப்பம் ஒன்றையும் குறிப்பிடுக.

ஆ) தேவைகளுக்கும் விருப்பங்களுக்குமிடையிலான நான்கு வேறுபாடுகளைத்தருக.

II) நாட்டில் தொழிற்படுகின்ற வணிகங்கள் பல்வேறு அடிப்படைகளில் வகைப்படுத்தப்படுகின்றன. அவ்வாறான நான்கு அடிப்படைகளை குறிப்பிடுக.

III) வணிகத்தின் மீது பல்வேறு அக்கறையுடைய தரப்பினர் அக்கறை கொள்கின்றனர் அவ்வாறே வணிகமும் அவர்கள் மீது அக்கறை கொள்கின்றது. இந்தவகையில் வணிகங்கள் வெவ்வேறு அக்கறைகொள்ளக்கூடிய தரப்பினர்கள் மீது அக்கறை கொள்வதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

IV) தளபாட உற்பத்தி நிறுவனம் ஒன்றில் பயன்படுத்தப்படும் உற்பத்திக் காரணிகளையும் அவற்றுக்கு ஒவ்வொர் உதாரணம் வீதமும் குறிப்பிடுக.

V) வணிகச் செயற்பாடுகள் மீது பல்வேறு சூழல்காரணிகள் செல்வாக்கு செலுத்துவதுடன் அவை வணிகத்தால் கட்டுப்படுத்தக்கூடியனவையாகவும் கட்டுப்படுத்த முடியாதவையாகவும் காணப்படுகின்றன.

அ) வணிகத்தால் கட்டுப்படுத்தக் கூடிய சூழல் விசைகள் நான்கைக் குறிப்பிடுக.

ஆ) வணிகத்தால் செல்வாக்கு செலுத்தக்கூடியதும் வணிகத்தால் கட்டுப்படுத்த முடியாததும் குறித்த வணிகத்தில் மட்டும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய நான்கு விசைகளைக் குறிப்பிடுக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

02) I) சுரேஸ் என்பவர் *2019* க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்து குடும்ப சூழ்நிலை காரணமாக உணவகம் ஒன்றை நிறுவியுள்ளார் இவர் வாடிக்கையாளர் சார்பாக நிறைவேற்ற வேண்டிய சமூகப் பொறுப்புக்கள் நான்கினைக் குறிப்பிடுக.

II) நிலைபேறான அபிவிருத்தி என்பதனை வரையறுத்து அதன் பகுதிகளை வென் வரிப்படத்தில் காட்டுக.

III) அரசின் பேரினப் பொருளாதார நோக்கங்களைக் குறிப்பிட்டு அவற்றை அடைவதற்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் முறைகளை குறிப்பிடுக.

IV) வணிகச் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு அரசு பல்வேறு வழிகளில் தலையிடுகின்றது.
வணிகச் செயற்பாடுகளில் அரசு தலையிடும் எவையேனும் நான்கு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

V) நுகர்வோரைப் பாதுகாக்கும் நோக்கில் தேசிய மட்டத்தில் உருவாக்கப்பட்ட உயர் அதிகாரம் கொண்ட நிறுவனம் பாவனையாளர் அலுவலங்கள் அதிகாரசபை ஆகும். பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் தொழிற்சாலைகளைக் குறிப்பிடுக.

(5 x 2 = 20 புள்ளிகள்)

03) I) பங்குடமை வணிகங்களுடன் ஒப்பிடும் போது தனியாள் உடமைவணிகங்களில் பல்வேறு நன்மை தீமைகள் காணப்படுகின்றன. அவற்றான இரண்டு நன்மைகளையும் இரண்டு தீமைகளையும் குறிப்பிடுக.

II) அமலன் கமலன் ஆகிய இருவரும் தலா 100000/= மூலதனமிட்டு எழுத்துவடிவிலான பங்குடமை ஒப்பந்தமின்றி உணவகம் ஒன்றை ஆரம்பித்து AK உணவகம் எனும் பெயரில் ஆரம்பித்து நடாத்தி வருகின்றனர்.
மேற்குறித்த பங்குடமை வணிகத்துடன் தொடர்புடைய நான்கு சட்டங்களையும் அவற்றின் பயன்பாடு / தேவைகளையும் குறிப்பிடுக.

III) சமகாலத்தில் நிகழும் கடுமையான சந்தைப்போட்டி காரணமாக பெரும்பாலான கூட்டுறவு வணிகங்கள் தோல்வியடைகின்றன. இவ்வாறான தோல்விக்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

IV) ‘ஆரம்பகாலம் முதல் இன்றுவரை முயற்சியாண்மையில் பல்வேறு பரிமானங்கள் காணப்படுகின்றன. முயற்சியாண்மையின் நவீன போக்குகள் நான்கினைக் குறிப்பிடுக.

V) சிற்றளவு வணிகங்களை ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு உதவித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது அவ்வாறான உதவித்திட்டங்களில் நிதி சார்ந்த ஊக்குவிப்புக்களுக்கும் நிதிசாரா ஊக்குவிப்புக்களும் தலா இரண்டு உதாரணம் தருக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

## பகுதி - II

04) I) ‘கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு அனைவரலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான பரிமாற்று ஊடகம் பணம் ஆகும்.
அ) பணத்தின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.
ஆ) சட்டப்பணத்தின் கூறுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

II) வைப்புக்களை ஏற்றல், கடன்வழங்கல் என்பவற்றுக்கு மேலாக வணிக வங்கி ஒன்றினால் ஆற்றப்படும் சேவைகள் நான்கினைக் குறிப்பிடுக.

III) மத்திய வங்கியினால் வணிகங்களின் வெற்றிக்கு ஆற்றப்படும் சேவைகளைக் குறிப்பிடுக.

IV) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுரேஸ் என்பவர் இலங்கை வங்கி கைதடிக் கிளையில் நடைமுறைக்கணக்கைப் பேணுகின்றார். இவர் கிளிநொச்சியைச் சேர்ந்த மக்கள் வங்கி பரந்தனில் நடைமுறைக்கணக்கைப் போணும் கண்ணன் என்பவருக்கு ரூபா 500000/- காரை விற்பனை செய்துள்ளார் இந்தக் கொடுக்கல் வாங்கலுக்கு அதியுயர் பாதுகாப்புடைய காசோலை ஒன்றை பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த காசோலையை வரைந்து அதன் பகுதிகளை குறித்துக் காட்டுக.

V) கூட்டுறவுக்கிராமிய வங்கி ஒன்றிலிருந்து சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் எவ்வாறு வேறுபடுகின்றது.

(5 x 2 = 10 புள்ளிகள்)

05) I) வணிகங்கள் தமக்கு எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் இடர்களில் இருந்து பாதுகாப்பைப் பெறுவதற்காக பல்வேறு காப்புறுதி ஒப்பந்தங்களை மேற்கொள்ளுகின்றது. காப்புறுதியை மேற்கொள்வதனால் வணிகங்கள் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் நான்கு தருக.

II) ஆயுள்காப்புறுதிக்கும் ஏனைய காப்புறுதிக்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கு தருக.

III) காப்புறுதியில் இடர்களைப் பகிருதல் என்பதன் அர்தம் யாது?

IV) வினைத்திறமையான தொடர்பாடல் செயன்முறையினை வரைந்து காட்டுக.

V) செல்வா என்பவர் ஆடைத்தொழிற்சாலை ஒன்றின் சிரேஸ்ர நிறைவேற்றுத்தர அதிகாரி ஆவார். இவர் தமது நிறுவனத்தில் பணிபுரிவேருக்கு கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்து நீண்ட நேரமாக அதனை நடாத்தி சில சமயங்களில் அவர் உணர்ச்சிவசப்பட்டு ஊழியர்களை பேசியும் உள்ளார். இருப்பினும் அக்கூட்டத்தின் மூலம் அவர் தான் எதிர்பார்த்த எதிர்பார்புக்கள் நிறைவு செய்து கொள்ளவில்லை.

மேற்குறித்த தொடர்பாடல் செயன்முறை அவரால் எதிர்ப்பார்த்த வண்ணம் அமையவேண்டுமாயின் அத்தொடர்பாடலில் காணப்படவேண்டிய பண்புகள் எவை?

(5 x 2 = 10 புள்ளிகள்)

06) I) விக்கி என்பவர் கண்டியில் இருந்து பூக்களைக் கொள்வனவு செய்து அவற்றை மாலையாக்கி யாழ்ப்பாணத்தில் உள்ள திருமண மண்டபங்களுக்கு விநியோகித்து வருகின்றார். இவர் தமது விநியோகத்திற்க சிறந்த போக்குவரத்து ஊடகம் ஒன்றைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய காரணிகள் எவை?

II) உற்பத்தி செய்த பொருட்களை நுகர்வோருக்கு கிடைக்கச் செய்யுவரை பாதுகாத்தல் களஞ்சியப்படுத்தல் ஆகும். களஞ்சியப்படுத்தல் செய்முறையாள் கூறுகளைத் தருக.

III) அ) அமையவியல் என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) அமையவியல் முறையின் நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.

IV) அ) விநியோக வழிமுறைகள் என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) சில்லறை வியாபாரத்தின் நவீன போக்குகள் எவை?

V) அ) நாணக்கடிதம் என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) எல்லை வைப்பு என்றால் என்ன?

(5 x 2 = 10 புள்ளிகள்)